பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

## பிரித்தானிய தமிழர் விளையாட்டுக் கழகம் மீது தொடரும் நெருக்கடி

பிரித்தானிய தமிழர் விளையாட்டு கழகத்தின் (BTSL) போட்டிகளில் அம்பெயராக பணியாற்றிய சொக்கன் என்பவர் அம்பெயர் கட்டணம் 300 பவுண்ட் தொலைபேசிக்கு செலவாகியது 50 பவுண் மொத்தம் 350 பவுண்களைத் தரவேண்டுமெனக் கோரியுள்ளார். கை பாதிக்கப்பட்ட முன்னாள் போராளியான இவர் வேறு தொழில் புரிவதற்கு இயலாதவர். அம்பயர் கட்டணம் அவருக்குரிய முக்கிய வருவாய். அது நீண்டகாலமாகக் கொடுக்கப்படாமல் உள்ளது.

ரெட்பிரிச் கவுன்சிலர் ஜெயரஞ்சனும் தங்கள் RLSSC கழகத்திற்கு வழங்க வேண்டிய நிதியை BTSL உடனடியாகத் தரவேண்டும் எனக் கோரி காராசாரமான மின் அஞ்சலை அனுப்பி வைத்திருந்தார். BTSL வழங்கய காரணங்களை தாங்கள் ஏற்கத் தயாரில்லை எனவும் கவுன்சிலர் ஜெயரஞ்சன் தனது மின் அஞ்சலில் தெரிவித்துள்ளார்.

## புத்தக வெளியீடும் ஆவணப்பட திரையிடலும்

நூல்: யமுனா ராஜேந்திரனின் 'புத்தனின் பெயரால்: திரைப்பட சாட்சியம்'

அறிமுகம்: ஆர் புதியவன், தலைமை: கண குறிஞ்சி, நூல் விமர்சனம்: மு புஸ்பராஜன், எஸ் வேலு

ஆவணப்படம்: ஆர் ஆர் சீனிவாசனின் 'அண்ணா நூறு: ஒரு வரலாற்றுப் பார்வை'

தொகுப்புரை: யமுனா ராஜேந்திரன், நன்றியுரை: எஸ் சிறிதரன்

24 ஒக்ரோபர் 2010 மதியம் 13:00 முதல் 17:00 வரை

Tolworth Girls School Hall, Fullersway North, Tolworth, KT6 7LQ

இலவச இதழ், குரல் 36, ஒக்ரோபர் 10 - நாளாந்த செய்திகளைப் படிக்க : thesamnet.co.uk

Voice of London Tamils

# லண்டன் குரல்

# தமிழ் கல்விச் சமூகத்தை யாழ் பல்கலைக்கழகத்தை மீட்டெடுக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வர வேண்டும்!

## யாழ் பல்கலையின் நலன்விரும்பிகள் இணைய வலையில் கையொப்பப் போராட்டம்!!!

"யாழ் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் வெற்றிடங்களை நிரப்புகின்ற போது முறைகேடான நியமனங்கள் இடம்பெற்றுள்ளது. பல ஆண்டுகளாக இதைச் சுட்டிக்காட்டிய போதும் இதனைச் சீர்செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை"

*எஸ் சுவர்னஜோதி, ஓடிறர் ஜென்ரல், ஓடிற் 2009*

இது மலையெனக் குவிந்துள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் சீரழிவின் ஒரு சிறு பகுதியே.

யுத்த சூழலில் இருந்து மீண்டுள்ள தமிழ்க் கல்விச் சமூகம் தமது கல்விக் கட்டமைப்புகளில் உள்ள சமூகவிரோத சக்திகளின் செயற்பாடுகளினால் அதிர்ந்து போயுள்ளனர். தமிழ் சமூகத்தினை வேரறுக்கும் அளவிற்கு கல்விக் கட்டமைப்புகளில் குறிப்பாக யாழ் பல்கலைக்கழகத்தில் நிர்வாகச் சீர்கேடு, ஊழல், மோசடி, பாலியல் பலாத்காரம் என்பன மலிந்து போயுள்ளன. யாழ் பல்கலைக்கழகம் வழங்கும் பட்டங்கள் அர்த்தமற்றவையாகிக் கொண்டுள்ளது.

யாழ் பல்கலைக் கழகத்தைச் இச்சீரழிவில் இருந்து மீள்விக்க அமைச்சர் தேவானந்தாவும் பல்கலைக்கழக கவுன்சில் உறுப்பினர்களும் முன்வரவேண்டும் என்று நலன்விரும்பிகள் இணையப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

நவம்பரில் நடைபெறவுள்ள யாழ் பல்கலையின் உபவேந்தர் பதவிக்கான போட்டியில் இப்பல்கலைக்கழகத்தை ஆசியாவின் சிறந்ததொரு பல்கலைக் கழகமாக்க கனவு கண்ட பேராசிரியர் கைலாசபதியின் கனவை நனவாக்கக் கூடிய ஒருவரையே அமைச்சர் தேவானந்தாவும் கவுன்சில் உறுப்பினர்களும் தெரிவு செய்ய வேண்டும் என்கிறார் இப்போராட்டத்தை முன்னெடுக்கும் ரரின் கொன்ஸ்ரன்ரைன்.

இப்பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவிக்காக யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து தற்போதைய உப வேந்தர் பேராசிரியர் என் சண்முகலிங்கம், கலைப்பீடத்தின் தலைவர் பேராசிரியர் என் ஞானகுமரன், வரலாற்றுத்துறையின் தலைவர் பேராசிரியர் சிற்றம்பலம் ஆகியோர் முக்கியமாகப் போட்டியிடுகின்றனர். யாழ் பல்கலைக்கழகம் சீரழிந்து கீழ்நிலைக்குச் சென்றதற்கு மிகமுக்கிய பொறுப்புக்களில் இருந்த இவர்களுக்கு முக்கிய பங்கு உள்ளது. மேலும் பல நிர்வாகச் சீர்கேடுகளுக்கு இவர்களே காரணமாகவும் இருந்தள்ளனர்.

அதனால் யாழ் பல்கலைக்கழகத்தை மீள்விக்க சிரழிவுக்கு வெளியே இருந்து கல்வித் தகமையும், நிர்வாகத் திறனும் உடைய ஒருவரைக் கொண்டுவருவதே பொருத்தமானது என போராட்டத்தில் இணைந்து கையொப்பம் இட்டுள்ள பலரும் கருத்து வெளியிட்டு உள்ளனர். அந்த வகையில் உபவேந்தர் பதவிக்கு போட்டியிடுகின்ற சர்வதேச பல்கலைக்கழக அனுபவமும் தகமையும் நிர்வாகத் திறனும் உடைய பேராசிரியர் ரட்ன ஜீவன் ஃகூல் அவர்களே இப்பதவிக்கு பொருத்தமானவர் எனக் கருதப்படுகிறார்.



தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு தமிழ் கல்விச் சமூகத்தை 21ம் நூற்றாண்டின் தேவைக்கு ஏற்ப கட்டியெழுப்ப விரும்பினால் அமைச்சர் தேவானந்தா பேராசிரியர் ரட்ன ஜீவன் ஃகூலுக்கு தனது ஆதரவை வழங்க வேண்டும் என்று அமைச்சருக்கு நீண்டகாலம் தம் அரசியல் ஆதரவை வழங்கிவரும் வி சிவலிங்கம், எம் சூரியசேகரம், ராஜேஸ் பாலா உட்படப் பலர் தெரிவித்துள்ளனர். பேராசிரியர் ஃகூல் இலங்கையிலேயே தகமைபெற்ற ஒருவர் என்றும் அவர் யாழ் பல்கலைக்கழகத்திற்குச் சென்று பணியாற்றுவதற்கு வாழத்துக்கள் என்றும் ஈபிடிபி கட்சியின் முன்னாள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ் தவராஜா ரிபிசி வானொலியில் தெரிவித்து இருந்தார்.

தமிழ் மக்களின் அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்ற அமைச்சர், பரிசு பெறும் மாணவி தன் காலத்தில் யாழ் பல்கலையில் பாதுகாப்பாகவும் பெருமிதத்துடனும் கற்க வழிசெய்வார் என நம்புவோம்.

# Student Visa மோசடி

## பல்லாயிரம் பவுண் பணத்தையும் இழந்து கல்வி வாழ்வையும் தொலைக்கும் இலங்கை – இந்திய மாணவர்கள்!

லண்டன் கல்லூரிகளில் பெரும் தொகைப் பணத்தைக் கட்டி வரும் நூற்றுக் கணக்கான மாணவர்கள் லண்டன் வந்திறங்கியதும் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகின்றனர். இவர்கள் படிக்க வந்த கல்லூரிகள் உள்துறை அமைச்சின் விதிமுறைகளுக்கு அமையாததால் மூடப்பட்ட நிலையில் கட்டிய பணம் இழக்கப்படுகிறது.

2006ல் London Reading Collegeக்கு3 ஆண்டுகள் பட்டப்படிப்பான Business Managment படிப்பதற்கு 3000 பவுண்வரை கட்டி விசா பெற்றுவந்த எஸ் கணேஸ்வரன் 2007ல் இரண்டாவது ஆண்டுக்கு வந்த போது அக்கல்லூரி உள்துறை அமைச்சின் தரப்பட்டியலில் இருந்த நீக்கப்பட்டது. அதனால் அம்மாணவன் London School of Business and Computing என்ற மற்றுமொரு கலலூரியில் மேலும் ஒரு 3000 பவுணைக் கட்டித் தன் படிப்பைத் தொடர்ந்தார். அதுவும் நீடிக்கவில்லை. 2008ல் அக்கல்லூரியும் தரப்படிட்டியலில் இருந்து நீக்கப்பட்டது. இன்னுமொரு கல்லூரிக்குப் இன்னுமொரு 3000 பவுண் கட்டி விசாவைப் புதுப்பிக்க முடியாத மாணவன் ஊரில் பட்டுவந்த கடனை அடைக்க முடியாது உள்துறை அமைச்சுக்கு ஒழித்து சட்டத்திற்குப் புறம்பாக வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளார்.

இவர் படிக்க வந்த இரு கல்லூரிகளில் மட்டும் 200 இலங்கை இந்திய மாணவர்கள் வரை கற்றுக்கொண்டிருந்தனர். உள்துறை அமைச்சின் தரப்பட்டியல் இறக்கத்தினால் 50ற்கும் மேற்பட்ட கல்லூரிகளில் படிக்க வந்த பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து 1000 பவுண் கட்டி CECOS Collegeக்கு கணணித் தொழில்நுட்பம் கற்க ஓகஸ்ட் 31 09ல் லண்டன் வந்தார் எஸ் ஹரிகரன். வந்து 7 நாட்களில் செப்ரம்பர் 7 09ல் அவர் படிக்க வந்த கல்லூரி உள்துறை அமைச்சால் மூடப்பட்டது. கட்டிய பணத்தை இழந்தார். இதே கல்லூரிக்கு வர 3500 பவுண்களை கட்டிய ஹரியின் மூன்று நண்பர்களுக்கு கல்லூரி மூடப்பட்டது. தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டதால் விசா வழங்கப்படவில்லை. (தொடர்ச்சி 2ம் பக்)

உண்மைகள் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரக் குறைவான மருத்துவ மையங்கள் மீது NHS நடவடிக்கை!

நோயாளர்களுக்கு தரமான மருத்துவ சேவையை வழங்கத் தவறும் மருத்துவ மையங்கள் மீது பிரித்தானிய தேசிய சுகாதார சேவைகள் அமைப்பு என்எச்எஸ் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகிறது. தரமான சுகாதார சேவையை வழங்கத் தவறுபவர்களில் ஆங்காங்கே தமிழ் மருத்துவ மையங்களும் தமிழ் மருத்துவர்களும் சிக்கி உள்ளனர். இவர்களில் சிலரின் மீதான விசாரணைகள் இன்னமும் தொடர்கின்றது.

வடக்கு லண்டன் கலோடோனியன் றோட்டில் பல்வைத்திய நிலையத்தை நடாத்தி வந்த கைலாசம் பஞ்சநாதன் மீது விதிக்கப்பட்ட இடைக்காலக் கட்டுப்பாடுகளை Islington Primary Care Trust தற்போது நீக்கி உள்ளது.

2008 ஒக்ரோபரில் தொற்றுநோய் கட்டுப்பாட்டு செய்முறைகளைக் கடைப்பிடிக்கத் தவறியதாக கைலாசம் பஞ்சநாதன் மீது குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டு General Dental Councilக்கு முறைப்பாடுகள் சென்றன. 2009 நவம்பரில் கைலாசம் பஞ்சநாதனின் பல்வைத்தியநிலையம் சோதனைக்கு உள்ளானது. தொற்றுநோய் கட்டுப்பாட்டை உறுதிசெய்வதற்கு கவனிக்கப்பட வேண்டிய 9 விடயங்களிலும் கைலாசம் பஞ்சநாதனின் வைத்திய நிலையம் தவறி இருந்ததை அச்சோதனை தெரியப்படுத்தியது. ஏப்ரல் 2009ல் மேற்கொள்ளப்பட்ட நோயாளர்களின் பதிவு பற்றிய ஓடிற்றில் பதிவுகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்பது தெரியவந்தது.

ஆனால் தனது தவறை உடனடியாகவே கவனத்தில் எடுத்துக் கொண்ட கைலாசம் பஞ்சநாதன் தான் தொழில் செய்வதை இடைநிறுத்த முன்வந்ததுடன் தொழில்தர ஆலோசனையைப் பெற்று வைத்திய நிலையத்தின் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டதாக விசாரணைக் குழு தெரிவித்து உள்ளது.

2009 யூனில் சுயாதீன அமைப்பினூடாக கைலாசம் பஞ்சநாதனின் வைத்திய நிலையம் மீளவும் சோதணைக்கு உட்படுத்தபக்பட்டது. தொற்றுநோய் கட்டுப்பாட்டுக்கு இருக்க வேண்டிய 9 விடயங்களும் இம்முறை தரமுடையதாக இருந்தது.

கைலாசம் பஞ்சநாதன் தொடர்ந்தம் தரத்தை உயத்தி வருவதில் திருப்தி அடைந்த விசாரணைக் குழு அவர் பாதிக்கப்பட்ட விடயங்களில் தரத்தினை உயர்த்தி உள்ளதை ஆதாரபூர்வமாக மதிப்பீடு செய்தனர். அதனைத் தொடர்ந்து அவரால் தரமான சேவைகளை வழங்க முடியும் என்பதை அக்குழு ஏற்றுக்கொண்டது. அதனையடுத்து அவர் தொழிலை மேற்கொள்வதில் இருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது.

## எரிஎன் இல் நகைச்சீட்டு: பணம் இன்னமும் வழங்கப்படவில்லை!



கட்டப்பட்ட நகைச்சீட்டு முடிவடைந்து பல மாதங்களாகிய நிலையிலும் சீட்டுப் பிடித்தவர்கள் தங்கள் பணத்திற்காக இன்னமும் காத்திருக்கின்றனர். பலருக்கு சில ஆயிரம் பவுண்கள் வரை இன்னமும் கொடுக்கப்படாமல் உள்ளதாகத் லண்டன் குரலுக்குத் தெரியவருகிறது. சிலருக்கு தவணையிடப்பட்டு வழங்கிய காசோலைகளும் அவர்களது வங்கிக் கணக்கில் பணமின்றி திரும்பி உள்ளது. பாதிக்கப்பட்ட சிலருக்கு சில நூறு பவுண்கள் வழங்கப்பட்டும் உள்ளது.

2008 ஓகஸ்ட்டில் ஆரம்பிக்கப்பட்டு 2009ல் முடிவடைந்த சீட்டுக்களின் கொடுப்பனவுகளும் அதற்கு முன்னான கொடுப்பனவுகளும் இன்னமும் செலுத்தப்படாமல் உள்ளது. இதற்கிடையே நகைச்சீட்டைப் பிடித்த ஏரிஎ[illegible] ஜீவலர்ஸ் மூடப்பட்டு ஏரிஎன் சொப் எனப் பெயர் மாற்றப்பட்டு உள்ளது. அதுவும் இன்னமும் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளது.

இச்செய்தி லண்டன் குரல் இதழ் 34ல் வெளியாகியது. இதனையடுத்து இத்தகவல் வழங்கியதாக தாங்கள் சந்தேகப்பட்ட சிலரை ஏரிஎன் ஜீவலர்ஸ் மிரட்டியதுடன் லண்டன் குரல் பத்திரிகை ஆசிரியருக்கு எதிராக அநாமதேய துண்டுப் பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டனர்.

இம்மிரட்டல்கள் தொடர்பாக சிங்போட் பொலிஸ் நிலையத்தில் குற்றப் பதிவு மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

## Student Visa மோசடி

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் பயண ஏற்பாட்டை மேற்கொண்ட முகவர் அவர்கள் கட்டிய தொகையின் 50 வீதத்தையே பலத்த போராட்டத்தின் பின் மீளக்கையளித்தார்.

மாணவருக்கான விசா உத்தியைப் பயன்படுத்தி பல கல்லூரிகள் லண்டனிலும் புறநகர்ப் பகுதிகளிலும் முளைத்துள்ளன. குறைந்த கட்டணத்தை காட்டி மாணவர்களைக் கவரும் இக்கல்லூரிகள் அப்பாவி மாணவர்களின் வாழ்க்கையை சீரழிக்கின்றன.

மேலும் மாணவர்கள் தங்கள் விசாவைப் புதுப்பிக்கும் போது 350 பவுண்களை உள்துறை அமைச்சு அறவிடுகிறது. குறிப்பிட்ட கல்லூரிக்கு விசா மறுக்கப்பட்டால் கட்டணத்தையும் இழக்கின்றனர். இன்னொரு கல்லூரிக்கு விண்ணப்பித்து விசாவைப் புதுப்பிக்க மீண்டும் 350 பவுண்கள் செலுத்த வேண்டும். தெற்காசிய நாடுகளின் மத்திய தர உயர் மத்தியதர குடும்பங்களில் இருந்து வரும் இம்மாணவர்கள் பலர் தங்கள் இளமைக் கல்வி வாழ்வைத் தொலைக்கின்றனர்.

இவ்வாறான மோசடியான கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அரசு அனுமதிப்பதன் மூலம் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர்.

## லண்டன் கிரிக்கட் கழகங்களிடையே கழகம் கட்டும் போட்டி

லண்டன் கிரிக்கட் கழகங்களிடையே கழகம் கட்டும் போட்டி ஆரம்பமாகி உள்ளது. வசந்தன் கிருஸ்ணன் தலைமையிலான பிரித்தானிய தமிழர் விளையாட்டுக் கழகத்தினுள் ஏற்பட்டுள்ள நெருக்கடியும் முரண்பாடுகளும் கடந்த லண்டன் குரல் இதழில் வெளியானது.

ஒக்ரோபர் 03ல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான ஆனால் வசந்தன் கிருஸ்ணன் தலைமையை ஏற்காத ஒரு பிரிவனர் ஹரோ ஐயப்பன் ஆலயத்தில் கூடி "வேணி" என்பவர் தலைமையில் புதிய கழகம் ஒன்றைக் கட்ட முற்பட்டு உள்ளனர்.

அதே சமயம் லண்டனில் 15 ஆண்டுகள் வரை கிரிக்கட் போட்டிகளை நடாத்தி வந்த ஸ்கந்தமூர்த்தி ஒக்ரோபர் 10ல் தங்கள் கழகத்தை மீளக்கட்டுவதற்கான சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்தள்ளார்.

அதேநாள் ஒக்ரோபர் 10ல் வசந்தன் கிருஸ்ணனும் தங்கள் கிரிக்கட் கழகங்களை சந்திப்பு ஒன்றிற்கு அழைத்துள்ளதாகத் தெரியவருகிறது. பெரும்பாலும் பிரித்தானிய தமிழர் விளையாட்டுக் கழகத்தில் உள்ள கிரிக்கட் கழகங்கள் மூன்றாகப் பிரிந்து செல்லலும் நிலை தோண்றியுள்ளது.

இதில் ஸ்கந்தமூர்தியின் கழகத்திற்கு கிரிக்கட் கழகங்கள் சென்றுவிடக் கூடாது என்பதில் ஏனைய இரு விளையாட்டுக் கழகங்களும் கவனமாக உள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் தங்களை தமிழ் தேசிய கிரிக்கட் அணிகள் என்கின்றனவாம்.

## 'தமிழ் கட்சிகளின் புரிந்தணர்வை நோக்கிய நகர்வை வரவேற்கின்றோம்!!!'

அறிக்கை – ஆவணி 02 புரிந்துணர்வுக் குழு (லண்டன்)



ஆவணி 02 புரிந்தணர்வுக் குழு (லண்டன்) இலங்கையில் தமிழ் கட்சிகளிடையே ஏற்பட்டு வருகின்ற உடனபாட்டை வரவேற்று செய்திக் குறிப்பை வெளியிட்டு உள்ளது.

"தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை கருத்தில் எடுத்து தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு புரிந்துணர்வுக்கு வருவதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகளை வரவேற்கின்றோம். இந்த முன்னெடுப்பு தமிழ் மக்களுடைய அரசியல் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது. இந்த நம்பிக்கையை மேலும் பலப்படுத்தும் வகையில் தமிழ் கட்சிகள் தமிழ் மக்களுடைய பொதுப் பிரச்சினையில் இறுக்கமாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும் என்பது புலம்பெயர்ந்த வாழ்கின்ற எமது எதிர்பார்ப்பு.

கடந்த கால்நூற்றாண்டுக்கும் மேற்பட்ட ஆயுதப் போராட்டம் தமிழ் மக்களுக்கு அவர்களின் உரிமைகளை வென்றெடுக்கத் தவறிவிட்டது. மாறாக அவலங்களும் அழிவுகளுமே மிஞ்சியுள்ளன. இப்போது தமிழ் மக்கள் மிகவும் கீழான நிலையை அடைந்துள்ளனர். இந்நிலையில் தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் சிதறுண்டு இருப்பது தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை தொடர்ந்தும் இழப்பதற்கே வழிகோலும். இதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் தமிழ் கட்சிகளிடையே ஒரு புரிந்தணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது உணர்வுபூர்வமாக ஏற்பட்டுள்ளதாகவே நாம் நம்புகின்றோம்.

கட்சிகளிடையே உள்ள அரசியல் வேற்றுமைகள் இருப்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆனால் தங்கள் தேர்தல் முரண்பாடுகள் வேற்றுமைகளுக்கு அப்பால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் இழக்கப்படுவதைத் தடுக்கவும் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும் குறைந்தபட்ச புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு தமிழ் கட்சிகள் வரவேண்டும்" என்று அச்செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

தமிழ் மக்களிடையே புரிந்துணர்வை எட்டுவதற்கு, ஆவணி 02 புரிந்தணர்வுக் குழு வினால் உருவாக்கப்பட்ட 'குறைந்தபட்ச புரிந்தணர்விற்கான முன்மொழிவுகள்' ஈபிடிபி தலைவர் தேவானந்தா, தவிகூ தலைவர் வி ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோருக்கு இலங்கை சென்றிருந்த நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசனால் நேரடியாக கையளிக்கப்பட்டது.

ஆவணி 02 புரிந்துணர்வுக் குழுவின் அறிக்கையைப் பெற்றுக்கொண்ட கட்சித் தலைவர்கள் தாம் பொதுவேலைத் திட்டத்தில் உறுதியாக இருப்பதாக கவுன்சிலர் போல் சத்தியநேசனிடம் தெரிவித்துள்ளனர். மேலும் தங்கள் முயற்சியால் உருவாக்கப்பட்டு உள்ள தமிழரங்கத்திற்கு மூத்தகட்சித் தலைவரான வி ஆனந்தசங்கரி அவர்களே தலைமை தாங்கலாம் என்றும் தலைமை விடயத்தில் தான் தலையிடப் போவதில்லை எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தன்னிடம் தெரிவித்ததாக கவுன்சிலர் சத்தியநேசன் தெரிவித்தார். த சிர்த்தார்த்தன், வி ஆனந்தசங்கரி ஆகியோரும் தமிழரங்கம் தொடர்பாக நம்பிக்கை வெளியிட்டதாகவும் கவுன்சிலர் சத்தியநேசன் தெரிவித்தார்.


குரல் 35, ஒகஸ்ட் 2010

லண்டன் குரல்

ஆசிரியர்: ஆசிரியர்குழு
த ஜெயபாலன் Dr பி சிவக்குமார்
நிர்வாகம்: ஆர் சுரேஸ்குமார்
ரி கொன்ஸ்ரன்ரைன் ஜோ ஜெயவேந்தன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 020 8905 0452

'லண்டன் குரல்' பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.


உண்மைகள் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி யாழில் மோசடி!

யாழ்ப்பாணத்தில் இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி ஏமாற்றும் நபர்களின் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன. சில தினங்களுக்கு முன்னர் நான்கு பேரிடம் வெளிநாட்டிற்கு அனுப்புவதாகக் கூறி பணம் பெற்று ஏமாற்றிய நபரொருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாக மாணவர்களிடம் பணம் பெற்று மோசடி செய்ததாகக் கூறப்படும் கணனி நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டார்.

லண்டனுக்கு அனுப்பி தொழில் வாய்ப்பினைப் பெற்றுத்தருவதாகக் கூறி குறித்த நபர் நான்கு மாணவர்களிடம் 18 இலட்ச ரூபா பெற்றுள்ளார். அம்மாணவர்களிடம் போலிச் சான்றிதழ்களையும் அவர் வழங்கியுள்ளார். இந்த ஏமாற்று நடவடிக்கை தொடர்பாக இம்மாணவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இம்முறைப்பாட்டை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கொழும்பு வெள்ளவத்தையைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகிறது. ஒக்ரோபர் 02 இல் கைது செய்யப்பட்ட இந்நபர் ஒக்ரோபர் 04ல் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ. ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணை செய்த நீதவான் குறிப்பிட்ட நபரை 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

கொழும்பு வெள்ளவத்தையைச் சேர்ந்த க. அம்பிகைகுமார் என்பவரே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நால்வரிடம் வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பணம் பெற்றவராவார். மூவரிடம் ஐந்து இலட்ச ரூபாவும், ஒருவரிடம் மூன்று இலட்ச ரூபாவும் இவர் பெற்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல் மேலும் ஒருவர் வெளிநாட்டுக்கு கல்வி பயில அனுப்புவதாகக் கூறி மூவரிடம் பணம் பெற்று ஏமாற்றியதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஈஸ்ற்ஹாம் முருகன் ஆலய அறங்காவலரின் உறவினர் தற்கொலை!

ஈஸ்ஹாம் ஸ்ரீ முருகன் ஆலய அறங்காவல் தலைவர் சம்பத் குமாரின் மைத்துனர் புருசோத்தமன் றொம்போர்ட் அருகே ரெயிலில் மோதி மரணமடைந்தார். 51 வயதான இவர் காலை வீட்டிலிருந்து சென்றவர் வீடு திரும்பவில்லை. அறங்காவல் தலைவர் சம்பத் குமாரின் சகோதரி டாக்டர் கிருஜாவின் கணவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவரது இறுதி நிகழ்வுகள் இதுவரை முடிவாகவில்லை.

## யாழ் கிராம சேவகர்கள் தொடர்பாக மாதம் 1500 முறைப்பாடுகள்!

யாழ் மாவட்டத்தில் பணியாற்றும் கிராம சேவகர்கள் தொடர்பாக நாளொன்றுக்கு 50 முறைப்பாடுகள் (மாதம் 1500 முறைப்பாடுகள்) வருவதாக யாழ் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். செப்ரம்பர் பிற்பகுதியில் கிராமசேவகர்களுடன் நடந்த சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மதுபோதை, லஞ்சம், ஊழல் தொடர்பாகவே இம்முறைப்பாடுகள் வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆர் பிரதீபனின் 'SHADOWS OF SILENCE' சர்வதேச பாராட்டைப் பெற்ற புலம்பெயர் தமிழ் படைப்பு



பிரான்ஸில் புலம்பெயர்ந்து வாழும் ஆர் பிரதீபனின் "சடோஸ் ஒப் சைலன்ஸ்" புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல் நெருக்கடிகளை பதிவு செய்யும் குறும்படமாக வெளிவந்தள்ளது. பாராட்டுக்குரிய "என் வீட்டு முற்றத்தில் ஒரு மாமரம்" என்ற குறும்படத்தை படைத்த இவரின் "சடோஸ் ஒப் சைலன்ஸ்" உம் பல பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.

பிரான்ஸ் ஹான்ஸ் மற்றும் அமெரிக்கத் திரைப்பட விழா ஒன்றிலும் திரையிடப்பட்ட இப்படம் லண்டனில் நடைபெறவுள்ள ரெயின் டான்ஸ் திரைப்பட விழாவிலும் திரையிடப்பட உள்ளது.

## வடக்கு கிழக்கில் சிறிய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள தமிழர் தகவல் நடுவம் அழைப்பு!

"Role of Diaspora in renewing hope and rebuilding lives of the war affected communities in Sri Lanka: Some thoughts and Action. - இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் வாழ்வை மீள்கட்டமைப்பதிலும், மீள நம்பிக்கையூட்டுவதிலும் புலம் பெயர்ந்தவர்களின் பாத்திரம்: சில சிந்தனைகளும் செயற்பாடுகளும்" என்ற தலைப்பிலான சந்திப்பு ஒன்றினை தமிழர் தகவல் நடுவம் ஒக்ரோபர் 02 2010ல் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் இலங்கையில் இருந்து சீலன் கதிர்காமர், தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர் பேராசிரியர் சிற்றம்பலம், தேசிய சமாதான சபையில் இருந்து பேராசிரியர் மூக்கையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பொதுச் சந்ததிப்பிற்கு முன்னதாக மேலுள்ளவர்களும் எஸ் ஜே சந்திரஹாசன், பாக்கியசோதி சரவணமுத்து, ராஜன் பிலிப்ஸ், பேராசிரியர் கணேஸ் இன்னும் சில கல்வியியலாளர்களும் மனித உரிமைவாதிகளும் கலந்துகொண்ட பிரத்தியேக சந்திப்பு இடம்பெற்றது. இவர்கள் செப்ரம்பர் 25 2010 முதல் "Post-war challenges facing Tamil speaking peoples of Sri Lanka. - இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் போருக்குப் பின் எதிர்கொள்ளும் சவால்கள்" என்ற தலைப்பில் பலசுற்று கலந்துரையாடல்களை மேற்கொண்டு இருந்தனர்.

ஒக்ரோபர் 02 சந்திப்பில் மதுபாவனையைக் கட்டுப்படுத்துவது, சிறிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது, கல்வி - குறிப்பாக ஆங்கிலக் கல்வியை வளர்க்க உதவுவது, இன ஐக்கியம், ஜனநாயகம், போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆற்றல் அற்ற தன்மையும் அவர்கள் மக்களைச் சென்றடைவதில்லை போன்ற விடயங்களை பேராசிரியர் சிற்றம்பலம் சுட்டிகாட்டினார். இப்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவூட்ட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். குறைந்தபட்ச அரசியல் தீர்வுகள் பற்றியும் சில விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

1950க்கள் முதல் இடம்பெற்ற தமிழ் பேசும் சமூகங்களின் இடப்பெயர்வு பற்றி பேராசிரியர் மூக்கையா விளக்கினார்.

கூட்டத்தில் தமிழர் தகவல் நடுவத்தின் வெளிப்படையற்ற தன்மையையும் ஒளிவுமறைவான செயற்பாடுகளையும் த ஜெயபாலன், ரவி சுந்தரலிங்கம் ஆகியோர் சுட்டிக்காட்டி தங்கள் கண்டனத்தை வெளியிட்டனர்.

## லிற்றில் எய்ட் இன் தலைவியாக டொக்டர் மரினி மனுவேற்பிள்ளை நியமனம்!

**லிற்றில் எய்ட் 3.5 மில்லியன் மருந்துப் பொருட்களை விநியோகித்தது.**

இலங்கையில் பல்வேறு மனித நேய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் லிற்றில் எய்ட் அமைப்பின் தலைவியாக டொக்டர் மரினி மனுவேற்பிள்ளை பொறுப்பேற்றுள்ளார். செப்ரம்பர் 17 இல் இடம்பெற்ற ஆண்டுக் கூட்டத்தில் லிற்றில் எய்ட் உறுப்பினர்கள் இவரை ஏகமனதாகத் தெரிவு செய்தனர்.



### உதவித் திட்டங்கள

மே 18 2009 ல் பிரித்தாகனிய பொது அமைப்புகளின் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்ட லிற்றில் எய்ட் இதுவரை 20க்கும் மேற்பட்ட உதவித் திட்டங்களை முன்னெடுத்து உள்ளது. தமிழ் அமைப்புகளுடனும் சர்வதேச அமைப்புகளுடனும் இணைந்து இவர்கள் இந்த உதவித் திட்டங்களை முன்னெடுத்தனர்.

லண்டன் அகிலன் பவுண்டேசன், ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயம், தேசம், தீவக மேம்பாட்டு சமூகம் ஆகிய தமிழ் அமைப்புகள் லிற்றில் எய்ட் உடன் இணைந்து மனித நேயத் திட்டங்களை முன்னெடுக்கின்றன.

Medicine Without Border, Global Medical Aid, Book Abroad போன்ற சர்வதேச அமைப்புகளும் லிற்றில் எய்ட் உடன் இணைந்து உதவிகளை மேற்கொள்கின்றன. Medicine Without Border, Global Medical Aid ஆகியவற்றின் உதவியுடன் லிற்றில் எய்ட் 3.5 மில்லியன் பவுண்ட் பெறுமதியான மருத்துவ உதவிகளைப் (பெரும்பாலும் மருந்துப் பொருட்கள்) பெற்று பெரும்பாலும் வடக்கு கிழக்கில் உள்ள மருத்துவ மனைகளுக்கு விநியோகித்தது. அரசுசாரா நிறுவம் ஒன்று இவ்வளவு தொகையான மருந்துப் பொருட்களை இலங்கையில் பெற்று விநியோகித்தது இதுவே முதற் தடவையாகும்.

### எதிர்காலம்

யுத்தத்தின் இறுதிக் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட லிற்றில் எய்ட் ஆரம்ப காலங்களில் முகாம்களில் இருந்த மக்களுக்கான உடனடித் தேவைகளை மேற்கொண்டது. மரக்கறி வகைகள், குழந்தைகளுக்கான பால்மா, துணிவகைகளை வழங்கியது.

மேற்கொண்டு இடைக்கால நீண்டகாலத் திட்டங்களையே லிற்றில் எய்ட் மேற்கொள்ளத் திட்டமிட்டு உள்ளது. குறிப்பாக சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவுவது. ஆங்கலக் கல்விக்கு உதவுவது போன்ற நடவடிக்கைகளை லிற்றில் எய்ட் திட்டமிட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக புக் அப்ரோட் நிறுவனத்துடன் இணைந்து ஆரம்ப பள்ளி மாணவர்களுக்கான நூல்கள் தருவிக்கப்பட்டு உள்ளது. இவை இன்னும் சில வாரங்களில் விநியோகிக்கப்பட உள்ளது. மேலும் 20 வரையான கணணிகள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. அவையும் இன்னும் சில வாரங்களில் விநியோகிக்கப்படும். லிற்றில் எய்ட்க்கு முதலாவது காசோலையை வழங்கிய எம் சூரியசேகரம் லண்டனில் இருந்து யாழ் சென்று மாணவர்களுக்கு ஆங்கில வகுப்பு எடுப்பது குறிப்பிடத்தக்கது.

### கணக்கு வழக்கு

புலம்பெயர் நாடுகளில் ஆரம்பிக்கப்பட்ட பொது அமைப்புகளில் லிற்றில் எய்ட் அமைப்பு தனது கணக்கு கோவைகளை திறந்ததாகவும் வெளிப்படையாகவும் வைத்தள்ளது. www.littleaid.org.uk என்ற இணையத்தளத்தில் கணக்கு வழக்குகளைப் பார்வையிட முடியும். இது ஏனைய அமைப்புகளுக்கும் முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

### ரஸ்டிகள் - உறுப்பினர்கள்

லிற்றில் எய்ட் இன் தலைவி: டொக்டர் மரினி மனுவேற்பிள்ளை, செயளாயினி: சர்மிளா பெர்னான்டோ. பொறுப்பான இரு பதிவிகளையும் பெண்களே வகிக்கின்றனர். தனாதிகாரி: சிறில் அல்பிரட், திட்ட இணைப்பாளர்கள்: சண் ராசையா, நிஸ்தார் மொகமட், ஜெயபாலன் தம்பிராஜா, ரரின் கொன்ஸ்ரன்ரைன். இவர்கள் இலங்கையின் பல்கலாச்சாரத்தன்மையை பிரதிபலிக்கும் வைகயில் அமையப் பெற்றுள்ளனர்.

"ரஸ்டிஸ் வீக்" இணையச் சஞ்சிகை லிற்றில் எய்ட் தலைவி மரினி மனுவேற்பிள்ளையை ஒரு வாரத்திற்கான ரஸ்டியாக தெரிந்து கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

— த ஜெயபாலன் —

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஜோதி' உளநல அமைப்பின் ஆலோசகர் யோக பேரின்பநாதனுடன் நேர்காணல்

(“ஜோதி“ – அகிலன் கோபாலகிருஸ்ணன் நினைவாக லண்டன் அகிலன் பவுண்டேசனினால் நடாத்தப்பட்டு வருகின்றது.)

*ல.குரல்: ஜோதி அமைப்பின் நோக்கம் செயற்பாடுகள் என்ன?*

“ஜோதி“ யின் முக்கிய நோக்கம் எங்கள் சமூகத்தினரின் உளநலம் பேணுதலே. இதனை இலவச Helpline மூலமும் இலவச கவுன்ஸிலிங் சேவைகள் மூலமும் செய்கிறார்கள்.

*ல.குரல்: ஜோதி அமைப்பின் நம்பகத் தன்மை எவ்வாறானது?*

“ஜோதி“ அமைப்பிடம் strict confidentiality policy இருக்கிறது. அவர்களது உதவியை நாடுபவர்களின் விஷயங்கள் எல்லாம் மிகவும் அந்தரங்கமாகப் பேணப்படும். ஆனால் ஒருவர் தனக்கோ அல்லது மற்றவர்களின் உயிருக்கு ஆபத்து உண்டாக்கக் கூடும் என்று கண்டால் அவருடன் இதைப்பற்றி வெளிப்படையாகக் கதைத்து தகுந்த உதவியை நாடுவதற்கான உதவிகளைச் செய்வார்கள். மற்றும் சட்டத்தின் முறையான வேண்டுகோளின் போதும் (court order) அந்தரங்கத்தை மீற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

*ல.குரல்: ஜோதி அமைப்பில் அலோசனை வழங்குபவர்களது தேர்ச்சி பற்றி.....*

“ஜோதி“ அமைப்பின் Helpline இல் வேலை செய்பவர்களுக்கு அவர்களுக்கான தேர்ச்சியை அல்லது பயிற்சியை ஜோதி அமைப்பினரே வழங்குகிறார்கள். நேரில் சந்தித்து உரையாடல் (counselling) சம்பாஷணைகள் qualified counsellors வழங்குகிறார்கள்.

*ல.குரல்: ஜோதி அமைப்பின் உதவியை பாதிக்கப்பட்ட ஒருவர் எவ்வாறு பெறமுடியும்?*

“ஜோதி“ அமைப்பின் Helpline மூலம் counselling மூலமும் உதவிகளைப் பெறலாம். மற்றைய ஐரோப்பிய நாடுகளில் வசிப்பவர்களும் “ஜோதி“ அமைப்பின் உதவியைப் பெறமுடியும்.

*ல.குரல்: உதவியை நாடும் ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆலோசகர்கள் அலோசனை வழங்கும் போது வெவ்வேறு ஆலாசணைகள் வழங்கப்படுவது நிலைமையை மேலும் மோசமானதாக்கும் அல்லவா?*

“ஜோதி“ அமைப்பில் வேலை செய்பவர்களுக்கு ஒழுங்கான முறையில் மேற்பார்வை வழங்கப்படுகின்றது. எல்லா உதவியாளர்களும் “ஜோதி“ அமைப்பின் நியதிகளையும் விதிமுறைகளையும் பின்பற்றி உரையாடுவதால் முரண்பாடுகள் வராதமுறையில் இந்த சேவை நடைபெறுகிறது.

*ல.குரல்: உளவியல் பிரச்சினை தங்களுக்கு இருக்கின்றது என்பதை பலர் அறிந்திருப்பதில்லை. அறிந்திருந்தாலும் அவர்கள் உதவியை நாட முன்வருவதில்லை. அவ்வாறான சூழலில் ஜோதி அமைப்பு எவ்வாறு அவர்களுக்கு உதவ முடியும்?*

உதவியை நாடுபவர்கள் தொலைபேசியில் கதைக்கும் பொழுது அவர்களது symptoms களை அறிந்து assess பண்ணி அதற்கான உதவிகளைச் செய்கிறார்கள்.

*ல.குரல்: சில மாதங்களாக இயங்கி வரும் ஜோதி அமைப்பு தமிழ் சமூகத்தில் எவ்வாறான வரவேற்பைப் பெற்றுள்ளது?*

தமிழ் சமூகத்தினரிடம் “ஜோதி“ அமைப்பு நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த அமைப்புடன் தொடர்புகொண்டு பயன் அடைந்தவர்கள். திரும்பவும் தொடர்புகொண்டு தங்கள் நன்றியைத் தெரிவிப்பதால் “ஜோதி“ அமைப்பு எங்கள் தமிழ் சமூகத்திற்கு செய்யும் சேவை மிகவும் ஒரு சிறந்த சேவை என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

# எந்திரன் : தமிழ்பட ரசிகர்களை தந்திரமாக ஏமாற்றும் பிரமாண்டமான படைப்பு !

— ரதிவர்மன் —



மிகப்பிரமாண்டமான செலவில் (25 - 40 அமெரிக்க கோடிகள்), தயாரிக்கப்பட்டு ஒரே நாளில் உலகில் 2250 திரைகளில் வெளியிடப்பட்ட படம் எந்திரன். முதல்நாள் காட்சிகளே 25 கோடி (அமெரிக்க டாலர்ஸ்) களுக்கு விற்கப் பட்டிருக்கிறதாம்.

படத்தின் ஆதிமூலம் தமிழாகவிருந்தாலும் ஹிந்தி, தெலுங்கு மொழிகளில் “டப்“ பண்ணப்பட்டிருக்கிறது. இப்படம் பலரின் பலவிதமான எதிர்பார்ப்புக்கயையும் தூண்டி விட்டிருக்கிறது. புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்ப்பட வசூலைக் கொடுப்பவர்கள் இலங்கைத் தமிழர்கள்.



புலம்பெயர்ந்து தாங்கள் வாழும் நாடுகளின் கலை கலாச்சாரத்தைப் புரிந்து கொள்ள அந்நாடுகளின் மொழிகளைச் சரியாகத் தெரியாத தமிழர்கள் தங்களின் பொழுது போக்குக்குத் தமிழ்ப் படங்களை நாடுகிறார்கள். இவர்களால் தமிழத் திரையுலகம் நன்றகப் பணம் படைக்கிறது. தமிழ்த் திரையுலகம் என்ன படத்தைக் கொடுத்தாலும் அதை விழுந்தடித்துக் கொண்டு பார்க்க புலம்பெயர்ந்த தமிழ்க் கூட்டம் இருக்கிறது.

திரையிடப்படும் இடங்கள் திருவிழா காண்கிறது என்று தென்னிந்தியத் தமிழப் பத்திரிகைகள் பறைசாற்றின். ஆனால் ஹிந்தியில் “ரோபோர்ட்“ என்ற பெயரில் (எந்திரன்) திரையிடப்பட்ட இடங்களில் கைவிட்ட எண்ணக்கூடிய கூட்டம்தான் வந்திருந்தது (01.10.10).

இது ஒரு வழக்கமான தமிழ்ப்படம், காதலிக்காக உலகத்தை அழிக்க முயலும் தமிழ்த் திரைப்படக் கதாநாயக வடிவத்தின் இயந்திர் சொருபமாக “எந்திரன்“ படைக்கப்பட்டு இருக்கிறது. தமிழகத்தின் பிரபல இயக்குனர்களில் ஒருத்தரான சங்கரின் கதையமைப்பு, இயக்கத்தில் மிக மிகப் பணச்செலவில் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. ஆங்கிலப் படங்களான “அவதார“, “மெட்டரிக்ஸ்“ போன்றவற்றிக்கு இணையானது இப்படம் என்று இந்திய தமிழ்ப்படங்கள் பெருமை கொட்டிக்கொள்கிறது.

கதாநாயகன் (ரஜனிகாந்த், அறுபது வயதைத்தாண்டியவரா அல்லது தொட்டுக் கொண்டிருப்பவரா) டொக்கடர் வசீகரன்(?) பத்துவருட கால கட்டங்களாக ஆராய்ச்சி செய்து உருவாக்கிய ஒரு இயந்திர மனிதனுக்கு டொக்டரின் காதலியான ஐஸ்வரியாவின் முத்தம் கன்னத்தில் பட்டதும் மனித உணர்வுகள் வந்து ஐஸ்வரியாவின் காதலை முழுமையாகப் பெற விஞ்ஞானத்தையே விழுங்குமளவுக்குத் தன்னை வளர்த்துக்கொண்டு இயந்திர மனிதன் போராடுவதுதான் கதை.

திரைப்படங்கள் எடுப்பவர்கள் தனக்குத் தெரிந்த ஒரு கருத்தையோ தத்துவத்தையோ சாதாரண மக்களுடன் பகிர்ந்து கொள்ளத்தான் படம் எடுப்பார்கள். அல்லது பொழுதுபோக்குக்காக ஜனரஞ்சகமான படங்கள் எடுப்பார்கள். அல்லது சமயத்தைப் போதிக்கக் கடவுள்களின் மகிமைகளைக் காட்டும் படங்களை எடுப்பார்கள்.

இதை எடுத்த சங்கரால், தென்னிந்தியாவின் பிரபல நடிகரின் பல நாள் ஆசையான “எப்படியும் உலக அழகியாகப் பட்டம் எடுத்த (1992) ஐஸ்வரியாவின் காதலானாக நெருங்கி நடிக்க வேண்டும் என்ற ஆசையை வெளிப்படுத்தத்தான இந்தப் படம் எடுக்கப் பட்டதா? என்ற கேள்வியினை திரைப்பட அமைப்பு எழுப்புகிறது.

அறுபது வயது முதுமை (பாவம் பார்கப் பரிதாபம), முப்பத்தியாறு (மூ)முத்தழகுடன் பல நாடுகளுக்கும் பறந்து படம் பார்க்க வரும் இளைஞர்களைக் கிளு கிளுப்படைய வைக்க முயற்சிக்கிறது.

இந்தக் கருத்துக்கு உதாரணம், காதலின் காதலி ஊடலில் தான்கொடுத்த முத்தங்களைத் திருப்பித் தரச்சொல்லிக் கதாநாயகன் கேட்க காதலி, காதலன் வசீகரனின் கன்னத்தில் பட்பட்டென்று “உம்மாக்கள்“ கொடுக்க, அவள்கொடுக்கும் “இச்சுக்களின்“ நெருக்கம் பத்தாதென்று அடம் படிக்கிறார், உலகத்திலேயே அதிக சக்தி வாய்ந்த இயந்திர மனிதனை உருவாக்கிய “க(ல்)லாநிதி“. இந்தக் கட்டத்தில் என்ன புதிய காதல் உத்தியை உட்புகுத்தி இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. (இக்கட்டத்தைப் பெரிதுபடுத்தி வமர்சனம் எழுதப்பட்டதால் இதை எழுத வேண்டியிருக்கிறது.)

இயந்திரத்துக்கு டாக்டரின் காதலி சானாவில் வந்த (ஐஸ்வரியாவில்) வந்த காதலைப் புரிந்து கொண்ட, கதாநாயகனின் எதிரியான இன்னொரு விஞ்ஞானி, இயந்திர மனிதனை மடக்கித் தன் தேவைகளுக்குப் பாவித்துப் பணம் சேர்க்க அயல் நாட்டு சக்திகளுடன் கூட்டுச் சேர்கிறான். ஐஸ்வரியாவின் காதலைத் தவிர வேறு எதையும் கண்டுகொள்ளாத இயங்திர மனிதன் தன்னனைப்போல் இன்னும் பல் நூறு இயந்திரங்களை உருவாக்கி சானாவுக்காக உலகை அழிக்க முயல்கிறான்

தனது காதிலியை இயந்திரத்திடமிருந்து காப்பாற்றவும் அதேநேரம் உலகைக் காப்பாற்றவும் கதாநாயகன் வசீகரன்(?) தனது விஞ்ஞான அறிவைப் பாவித்து இயந்திர மனிதனை அழித்து விடுகிறார்.



இயக்குனர் சங்கர் தனது உதவி இயக்குனர்களுக்குப் பல ஆங்கிலப் படங்களைக் கொடுத்து அவற்றில் வரும் விறுவிறுப்பான கட்டங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்துத் தனது படங்களின் “தேவைகளுக்குப்“ பாவிப்பதாக எங்கேயோ படித்திருக்கிறேன்.

பல ஆங்கிலப் படங்கனின் காட்சிகளின், கருத்துக்களின் சாயல்கள் இப்படத்தில் தொட்டுத்தடவிக் கிடக்கின்றன.

இந்தப் படத்தில் கதை பற்றியோ நடிப்பு பற்றியோ பெரிதாக ஒன்றும் இல்லை ஐஸ்வரியாவுடன் பல நாடுகளுக்குப் போய்க் கவர்ச்சி நடனம் ஆடவும் ஐஸ்வரியாவுக்குல விதமான ஆடைகளைப் போட்டு அழகு பார்க்கவும் பிரமாண்ட செலவு செய்யப் பட்டிருக்கிறது.

அதுசரி கிளிமான்சரோ பாடடுக்குரிய ஆட்டக்காட்சியை ஏன் தென் அமெரிக்காவில் பெரும்பாலும் எடுத்தார்கள்?

கிளிமாஞ்சரோ ஆபிரிககாவிலல்லவா இருக்கிறது? (தமிழர்களுக்குச் சரித்தரம் தெரியாதென்ற நினைவு போலும்!)

இவர்கள் அந்தப் பாடலுக்குப் படம் எடுத்த இடம் ஒருகாலத்தில் நாகரிக மனிதர்களாயிருந்து ஸ்பானிய காலனித்துவ வாதியான பிரான்கோயி பிச்சாரோ (1528) என்பரால் அழிக்கப்பட்ட “இங்கா“ என்ற இன மக்களைக்கொண்டிருந்த “மாச்சுப்பூச்சி“ (1400 ஆண்டுகளில் உருவாக்கிய நகர்) என்ற தென்னமெரிக்க இடமாகும்.)

இந்தப் படத்தை மக்கள் திரணடு வந்த பார்க்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டி படத்தை ஓட்டுவது மிரமாண்டமான டெக்னிக் காட்சிகளாகும். இப்படியான காட்சிகளைப் பார்க்க விரும்புவர்கள் உங்கள் குழந்தைகளுக்குப் பக்கத்தில் அவர்கள் கொம்பியூட்டர் கேம் விளையாடும்போது சேர்ந்திருந்தால் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும்.

இறுதியாக, இப்படம் 12 வயதுக்கு மேலுள்ள வயதுள்ளவர்கள் பார்க்க வேண்டிய படம் என்று மேற்குலக தணிக்கை சபை சொல்லியிருக்கும்போது “எந்திரன்“ குடும்பத்துடன் சேர்ந்திருந்து பார்ககூடிய படம் என்று தென்னிந்தியத் தமிழ் இணையத்தளம் ஒன்று புழுகித் தள்ளியிருக்கிறது.

குடும்பம் என்றால் அதில் சிறு குழந்தைகளும் அடங்குவார்கள், அதைப்பற்றி ஒரு சின்னச் சந்தேகம், கதாநாயகியை வில்லர்கள் துரத்தித் தங்கள் கூட்டத்தின் நடுவிற் கிடத்தி துப்பட்டாவை உரிவதை அந்தக் கூட்டத்திலுள்ள ஒருத்தார் மோபைலில் படம் எடுக்கிறார் இககேவலமான கட்டத்தை சுப்பஸ்ரார் ரஜனிகாந்த் தனது பேரன் யாத்திராவுடன் சேர்ந்திருந்து பார்ப்பாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரசிங்கம் தமிழ் தேசியத்தின் போராளி!

– என் செல்வராஜா –

Tamil Action Group அமைப்பின் தாபகர் அமரர் சின்னப்பு மகரசிங்கம் அவர்களின் சேகரிப்பில் இருந்த சுமார் 300 அரிய நூல்கள், அவர்களது குடும்பத்தினரின் விருப்பத்தின்பேரில் நான் பெற்றுக்கொண்டேன். மனித உரிமைகள், சர்வதேச மனிதஉரிமை மீறல்கள் தொடர்பான பல நூல்களும், இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான பல ஆங்கில நூல்களும் உலகளாவிய இன ஒடுக்குமுறைகள் தொடர்பாக வெளிவந்த அறிக்கைகள் ஆவணங்கள் என்பனவும் இத்தொகுதியில் அடங்குகின்றன.

இங்கிலாந்தில் மிக நீண்ட காலமாக வாழ்ந்துவந்த அமரர் மகரசிங்கம் அவர்களது சேகரிப்பகளினூடாக அவர் பற்றிய பல தகவல்களைக் காண முடிந்தது. அவரது தேர்ந்த சேகரிப்பிலிருந்து அவர் சர்வதேசரீதியில் மனித உரிமை மீறல் தொடர்பான தகவல் திரட்டலிலும் ஈடுபட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம். இலங்கைத் தமிழர்களின் நலன் தொடர்பாக சர்வதேச ரீதியில் செயற்பட்ட தமிழரல்லாத தனிநபர்களுடனான தொடர்பிலும் மிக ஆழமானதும் நெருக்கமானதுமான தொடர்பினை அமரர் மகரசிங்கம் அவர்கள் பேணிவந்துள்ளார்.


தனிநபர் நிறுவனமாகச் செயற்பட்ட அமரர் மகரசிங்கம், நெல்சன் மண்டெலாவின் விடுதலை தொடர்பாகவும், பாலஸ்தீனியர், சீக்கியர் மற்றும் இலங்கையிலிருந்து அகதி அந்தஸ்து கோரி இங்குவந்த தமிழர்களின் வதிவிட அனுமதி தொடர்பாகவும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்துள்ளதை அவரது ஆவணங்களினூடாகக் காண முடிந்தது.

இன்று ஈழத் தமிழர்கள் பற்றிய அரசியல் நலனில் அக்கறைகொண்டு அமைப்பு ரீதியில் போராடிவரும் இலங்கைத் தமிழர்கள் தமது போராட்டம் பற்றிய அறிதலை இங்கிலாந்தில் வாழும் அதே உணர்வுகொண்ட பிற சிறுபான்மை இனக்குழமங்களிடம் கொண்டுசெல்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக உள்ளது. பல்லின சமூகங்களின் எழுச்சிக் கூட்டங்களில் பங்கேற்கும் தமிழ் அமைப்புகளின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணலாம்.

அமரர் மகரசிங்கம் இவர்களுக்கு விதிவிலக்காக இருந்து தனிமனித நிறுவனமாக இயங்கித் தனது Tamil Action Group அமைப்பின் மூலம் இங்கிலாந்தில் நடந்த தமிழரல்லாதவர்களின் எ்ழுச்சிகளுக்கும் உதவியிருக்கிறார் என்ற செய்திகள் புகைப்பட ஆதாரங்களுடன் காணக்கிடைக்கின்றன. இவரது பணிகள் பற்றிய ஆய்வினை எதிர்காலத்தில் எவராவது முன்னெடுத்தால் ஒரு மானிட நேயனின் பொதுவாழ்வின் பல தகவல்கள் வெளியாகும். பல ஆங்கிலப் படைப்பாளிகள் தாம் கையெழுத்திட்டு வழங்கிய நூல்களையும், நட்புடன் அமரர் மகரசிங்கத்துடன் மேற்கொண்ட கடிதப் பரிமாற்றங்களையும், நூல்களுக்குள் காணப்பட்ட கடிதக் குறிப்புகளினூடாக அறிய முடிந்தது.

அமரர் மகரசிங்கத்தின் நூல்கள் அனைத்தும் தற்போது பதிவுக்குள்ளாக்கப்பட்டு, உருவாக்கிவரும் ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகத்தின் சேர்க்கைகளுக்குள் உள்ளடக்கப்பட்டு உள்ளதென்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

ஆனால் எனது தனியான உழைப்பினால் மட்டும் ஒரு ஐரோப்பியத் தமிழ் ஆவணக்காப்பகத்தை அமைத்திட முடியாது. பொருளாதார ரீதியாகவும், ஆவணச் சேகரிப்புகளின் மூலமும் ஆதரவை வழங்க வேண்டிய அவசியம் எமது சமூகத்தில் இன்னமும் உணரப்படவில்லை என்பதே வருத்தத்திற்குரிய உண்மையாகும். இந்நிலை விரைந்து மாற்றப்பட வேண்டும்.



தமிழ்த் தேசியத்தின் போராளியான மகரசிங்கம் யூன் 4 2010ல் காலமானார். யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இலங்கை இனப்பிரச்சினை காரணமாக புலம்பெயர்ந்த மிக ஆரம்பகாலத்தவர் ஆவார். தென்கிழக்கு லண்டனில் உள்ள மருத்துவ இல்லத்தில் தனது 87வது வயதில் உயிர் நீத்துள்ளார்.

பிரித்தானியாவில் தமிழ் தேசியத்திற்கான போராட்டங்களை முன்னெடுத்ததில் மகரசிங்கம் குறிப்பிடத்தக்கவர். இவரே பிரித்தானியாவில் தமிழ் மக்கள் மீதான இனஒடுக்குமுறைக்கு எதிராக முதன் முதலில் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தவர்.

பிரித்தானியாவுக்கு தமிழ் மக்கள் அரசியல் தஞ்சம்கோரிப் புலம்பெயர்ந்த போது அவர்களுக்கான உதவி நடவடிக்கைகளிலும் இவர் ஈடுபட்டுள்ளார். Tamil Action Group என்ற அமைப்பை உருவாக்கி அதனூடாக அரசியல் தஞ்சம் கோரிப் புலம்பெயர்ந்தோருக்கு உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கி வந்தார். தமிழ் மக்கள் மீதான இனஒடுக்குமுறைக்கு எதிராகவும் அகதிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் மகரசிங்கம் ஐநா வின் வெவ்வேறு பிரிவுகளில் தொடர்ச்சியாகக் குரல்கொடுத்து வந்தவர்.

## குற்றாலம் வெங்கடாச்சலம் நாகராஜன்
# நீங்காத நினைவுகள்

இணுவையூர் நவேந்திரன்



மிகக் கனத்த மனத்துடன் இக்கடினமான செய்தியை எழுதும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன். குற்றாலம் என்றவுடன் எமக்கெல்லாம் மனதில் குதித்தோடும் எண்ணம் - இந்தியாவில் உள்ள குளுமையான இடமான குற்றாலமும் அதில் சில்லென்று ஓடும் அருவியும் மலையும் அதன் சூழலும். ஆனால் அதே குளுமையுடனும் அதே பெயரில் வாஞ்சையுடனும் எம்மிடையே ஒரு மாமனிதன் நேற்றுவரை நடமாடினான். ஆனால் அம்மாமனிதன் இன்று எம்முடன் இல்லை. (தோற்றம் 16 05 1966 - மறைவு 28 09 2010)

நாட்டியப்பாடலில் "இமயம்" என்று அழைக்கப்படக்கூடிய குற்றாலம் வெங்கடாச்சலம் நாகராஜன் செப்ரம்பர் 28 6.30 மாலையில் தனது இறுதிமூச்சை நிறுத்திக் கொண்டார்.

தன்னிகரற்ற ஒரு பாடகன் பாடலாசிரியன் இசையமைப்பாளன். இம்மூன்றும் ஒருசேர அமைவது மிக அபூர்வம். ஆனால் இவை அனைத்தின் சொந்தக்காரன் குற்றாலம் நாகராஜன். இவரது பாடலில் மயங்காதவரே இலர். சிறுவர்களில் இருந்து முதியோர்வரை இவரது இசைப் பிரியர்கள்.

ஒருமுறை பழகினால் காந்தம் மாதிரி இழுக்கும் அதீத மனோபாவம் இவரது உன்னத மனித குணத்தால் இவரது குறைகளை எல்வாம் மறந்து மீண்டும் மீண்டும் இவரை நாடி ஓடும் அகஅழகு கொண்டவர்.

1992ம் ஆண்டளவில் திரு கணேசனால் லண்டனிற்கு அறிமுகம் செய்யப்பட்டார். நூற்றுக்கணக்கான ஏன் ஆயிரக்கணக்கான என்றுகூடச் சொல்லக்கூடிய நாட்டிய அரங்கேற்றங்களில் பாடிய முடிசூடா மன்னன். பாடல் வடிவமைப்பதிலும் இசையமைப்பதிலும் ஈடு இணையற்ற தனித்திறன் கொண்டவர்.

ராஜாவின் "குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா" என்ற பாடலுக்கமைய யாரையும் குறை கூற மாட்டார். எல்லோரிலும் ஒரு நிறைவுகாணும் ஒரு உன்னத மனிதப்பிறவி. இவரது குழந்தை உள்ளத்தால் யாராலும் வெறுக்கப்பட முடியாதவர்.

இசைப்பரம்பரையில் தோன்றிய காரணத்தால் சிறுவயதில் இருந்தே இயற்கைஞானம் கொண்டவர். ஆனாலும் 20 வயதுவரை சங்கீதத்தை முறையாகக் கற்கும் வாய்ப்பு இருக்கவில்லை. பின்னர் சங்கீதமேதை வி ஆர் கிருஷ்ணன் என்பவரிடம் இசையை பயிலும் அரிய வாய்ப்பைப் பெற்றார்

இவரது குரு வி ஆர் கிருஷ்ணன் தியாகராஜா சுவாமிகள் இசைப்பரம்பரையில் வந்த செம்மங்குடி சீனிவாச ஐயர் அவர்களின் மாணவர் எனடபது குறிப்பிடத்தக்கது. காலம் தாழ்த்தி 20 வயதில் இசையைப் பயின்றாலும் மிகக் குறுகிய காலத்திலேயே நாட்டியப் பாடலுக்கு குற்றாலம் நாகராஜன் என முத்திரை பதித்து தனக்கென்று ஒரு அசையா இடத்தை சென்னை மக்களிடம் பிடித்துக் கொண்டார்.

இவரது இசைத்திறன்கண்டு தனது சரித்திரத்தில் முதன்முறையாக "சிறந்த பரதநாட்டிய பாடகன்" என்று பட்டமளித்து Music Academy Madras கௌரவித்தது.

இசையின் உச்சத்தைத் தொட்ட இவர் நினைத்திருந்தால் பணத்தின் உச்சத்தையும் தொட்டிருக்கலாம். மூன்று தலைமுறைக்குத் தேவையான சொத்தை இவரால் தேடியிருக்க முடியும். ஆனால் ஆயிரக்கணக்கான இளம் இசைப்பயிர்களை உருவாக்குவதில் ஆர்வம்காட்டிய இவர் பணத்தின் பக்கம் கவனம் செலுத்தாதது இவரது மகனும் மனைவியும் செய்த துர்ப்பாக்கியமே.

"வல்லவன் வகுத்ததே வாய்க்கால்" என்பது இயற்கை நியதி. இருப்பினும் காலத்திற்குக் காலம் நல்லவர்களும் தோன்றத்தான் செய்கிறார்கள். வல்லவர்களை காலம் மறந்துவிடும் வரலாறு இருக்காது. ஆனால் நல்லவர்களிற்கு வரலாறு உண்டு. இவர்களை காலம் மறக்காது.

குற்றாலம் நாகராஜனின் இசைச்சேவை சாதனை மிகப்பெரியது. அவரது வெற்றிடம் இலகுவில் நிரப்ப முடியாதது. அவரது பிரிவால் வாடும் மகன் சங்கீத்திற்கும் துணைவி கோமதிக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

இவரது பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக சென்னைக்கு அனுப்பப்பட இருக்கிறது. லண்டனில் இறுதி மரியாதை ஒக்ரோபர் 03 காலை இடம்பெற்றது.

## பிரித்தானிய தொழிற்கட்சியின் புதிய தலைவர் எட்வேர்ட் சாமுவேல் மிலிபாண்ட : ரதிவர்மன்





வைகாசி மாதம் நடந்த தேர்தலில் தொழிற்கட்சி பதவியிழந்தது. அவர்களின் தோல்வி,1918ம் ஆண்டுக்குப் பின் தெரிழிற் கட்சிக்குக் கிடைத்த படுதோல்வியாகக் கருதப்பட்டது. பெரும்பாலான பிரித்தானிய மக்களின் எதிர்பார்ப்பு, எட்வேர்ட்டின் தமயனான டேவிட் மிலிபாண்ட் தொழிற்கட்சியின் தலைவராக வருவார் என்பதாகும். டேவிட் மிலிபாண்ட, பிறவுன் அரசாங்கத்தில் வெளிநாட்டுத்துறை அமைச்சராக இருந்தவர். ரோனி பிளேயரின் வாரிசாகக் கருதப்பட்டவர், ரோனி பிளேயரின் வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்படிப்பவர், ரோனி பிளேயர், பிரித்தானிய மக்களின் வெறுப்பைச் சமபாதித்துக்கொண்ட ஈராக்குக்குப் படையை அனுப்பியவர் இதனால் ஆயிரக்கணக்கான தொழிற்கட்சி அங்கத்தவர்கள் கட்சியை விட்டு வெளியேறினார்கள்.

தொழிற்கட்சியின் தலைவர் கோர்டன் பிறவுன், 2010ம் ஆண்டு வைகாசி மாதம் தனது பதவியை இராஜினாமா செய்ததும், டேவிட் மிலிபாண்ட் அந்தத் தலைமைக்குத் தன் பெயரைக் கொடுத்ததும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்குப் புத்துயிரைக் கொடுத்தது. டேவிட் மிலிபாண்டைத் தேர்தலில் வெற்றி காண "தொழிற்கட்சிக்கான தமிழர்கள்" என்ற பெயரில் கூட்டத்தையும் வைத்தார்கள். தேர்தலுக்கு உதவப் பணம் சேர்த்தார்கள்.

ஆனால் பிரித்தானியாவின் பிரமாண்டமான தொழிற் சங்கங்களான யுனைட், யூனிசன் போன்றவர்களின் ஆதராவால் எட்வேர்ட மிலிபாண்ட் தொழிற்கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அன்னிய நாடுகள் பற்றிப் பேசும்போது, ஈராக் நாட்டுக்குப் போர்ப்படைகளை அனுப்பியது சரியான விடயமல்ல என்று எட் மிலிபாண்ட் சொல்லியிருக்கிறார்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட நாற்பது வயதான (24.12.1969) எட்வேர்டின் தந்தை தாயார் இரண்டாம் உலகப்போர்க் காலகட்டத்தில் ஹிட்லரின் கொடுமையிலிருந்து தப்பி ஓடிவந்த அகதிகள்.

இன்று, இருபதாவது தொழிற்கட்சித் தலைவராக வந்திருக்கும் எட்வேர்ட் ஒக்ஸ்போர்ட், லண்டன் கொலிஜ் ஒவ் எக்கொனமி போன்றவற்றில் கல்விகற்ற எட்வோர்ட் அமெரிக்காவில் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராக இருந்தவர்.

உண்மைகள் உறங்குவதில்லை.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசு பாவிகளையும் மன்னித்து வரவேற்பாராக!

# அருட்தந்தை எஸ் ஜே இம்மானுவேல்

# மீண்டும் கத்தோலிக்க மதத்துடன் இணைவு!

– ரீ கொன்ஸ்ரன்ரைன் –




“நான் முதலில் தமிழன் - பின்னர்தான் கிறிஸ்தவன்“, “பிரபாகரனை யேசுநாதருடன் ஒப்பிடலாம்“ என வேத வாசகங்களைப் பொழிந்த (வணபிதா) பேராசிரியர் டாக்டர். எஸ் ஜே இம்மானுவேல் அடிகளார் மீண்டும் கத்தோலிக்க மதத்துடன் இணைவதை தற்போது பரவலாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

1950க்களில் லத்தீன் அமெரிக்காவில் உள்ள ரோமன் கத்தோலிக்க தேவாலயங்களில் “இறையியல்“ ஒரு புரட்சிகர வடிவத்தை எடுக்க ஆரம்பித்தது. “விடுதலை இறையியல்“ என்ற கருத்தாக்கம் உருவானது. இது காலப்போக்கில் லத்தீன் அமெரிக்காவையும் தாண்டிய சர்வதேச கருத்தாக்கமானது. “கிறிஸ்தவ மத நம்பிக்கையை ஏழைகளின் துன்பம், அவர்களின் போராட்டம், நம்பிக்கை, சமூகத்தை விமர்சனப் பார்வையுடன் அணுகுவது என்ற அடிப்படையில் ஏழைகளின் கண்களினூடாக கத்தோலிக்க மதமும் கிறிஸ்தவமும் பார்ப்பதுவே “விடுதலை இறையியல்“ எனப்படுகின்றது.“

சமூக அநீதிகளுக்கு எதிரான ஒரு உள்ளுணர்வாக இந்த இறையியல் பலம்பெற்றது. இது லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து இலங்கை போன்ற நாடுகளுக்கும் பரவியது. இந்த “விடுதலை இறையியல்“ அடிப்படையில் இலங்கையின் தமிழ் பகுதிகளில் இருந்த கத்தோலிக்க மத நிறுவனம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கும் நிலையை எடுத்தது.

ஆனால் பின்னான காலகட்டத்தில் விடுதலை அமைப்புகளே மக்களது துன்பங்களுக்கும் கொலைகள் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்குக் காரணமாக இருந்த போதும் இந்த மத நிறுவனத்தினால் முழுமையாக தங்களை விடுவித்துக்கொள்ள முடியவில்லை. விரும்பியும் விரும்பாமலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தமிழ் கத்தோலிக்க மத நிறுவனம் நெருங்கி நின்றதற்கு இதுவே காரணம்.




ஆனால் எஸ் ஜே இமானுவல் அடிகளார் அருட்தந்தை கஸ்பார் போன்றவர்கள் தங்களது சொந்த விருப்பம் காரணமாக தங்களையும் தாங்கள் சார்ந்த மத நிறுவனத்தையும் தம் சொந்த நலன்சார்ந்து பயன்படுத்திக் கொண்டனர்.

கடந்த சில வருடங்களாக புலம்பெயர் தமிழர்களின் புலன்பெயர்வை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி அவர்களை உசுப்பேத்தி உசுப்பேத்தி லண்டன் பாரிஸ் ஜேர்மன் நகரங்களில் நடுறோட்டில் படுக்கவைத்து ஆட்டம் ஆடி கூத்தாடி தாம் வாழும் தமக்கு தஞ்சம் கொடுத்த நாடுகளுக்கே இடைஞ்சலாக இருந்த சம்பவங்களில் எஸ் ஜே இம்மானுவேலின் பங்கு முக்கியமானது.

கடந்த பல வருடங்களாக ஜேர்மனியில் இருந்துகொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரச்சார சக்கரத்தைச் சுற்றியவர் எஸ் ஜே இம்மானுவேல் அடிகளார். பணத்தை மட்டும் அடிப்படையாக வைத்து எவ்வித அரசியல் அறிவோ சாணக்கியமோ அல்லது மொழித்திறனோ அற்ற புலம்பெயர் புலி வால்களுக்கு உயர் கல்வித் தகைமையும் அதீத பேச்சாற்றலும் பலமொழித் திறமையும் கொண்ட அதிலும் குறிப்பாக ஒரு கத்தோலிக்க உயர் குருவானவர் கிடைக்கப்பெற்றது ஒரு வரப்பிரசாதமாக கருதப்பட்டது. வணபிதா எஸ் ஜே இம்மானுவேலின் தகமையுடனும் அனுபவத்துடனும் எந்த புலி பிரமுகரும் ஈடாக இருக்கவில்லை. இதனால் Global Tamil Forum (GTF) (உலக தமிழ் பேரவை) இன் தலைமை எஸ் ஜே இம்மானுவேலுக்கு பொன் தகட்டில் வைத்துக் கொடுக்கப்பட்டது.

GTF பிரித்தானியாவில் இயங்கிவரும் British Tamil Forum, Tamils For Conservative, Tamils For Labour போன்ற அமைப்புக்கள் போன்றதொரு விடுதலைப் புலி ஆதரவு அமைப்பே. ஆக மொத்தமாகக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் வணபிதா இம்மானுவேல் புலன்பெயர் தமிழர்களின் தேசியத்தலைவர். இம்மானுவேல் அடிகளார் Global Tamil Forum (GTF) என்ற நெடியவன் குழுவின் தலைவர் என South Asia Intelligence Review இதழில் குறிப்பு உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் சர்வதேச விடயங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டவரே நெடியவன் என்கின்ற பேரின்பநாயகம் சிவபரன். தற்போது இவரும் இவரைச் சார்ந்த குழுவினருமே தமிழீழ விடுதலைப் புலிகளின் பெரும்பான்மையை கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவர்களே எஸ் ஜே இமானுவலின் பின்னிருந்து உலகத் தமிழர் பேரவையை இயக்குகின்றனர். இவர்கள் இலங்கையில் மீண்டும் குண்டுகளை வெடிக்க வைத்து “பனை மரத்தில வெளவாலா தலைவருக்கே சவாலா! தலைவர் வந்துவிட்டார். பராக்! பராக்!!“ என்று பறைசாற்ற நேரம் பார்த்துக் காத்திருக்கின்றனர்.

உலகத் தமிழ் பேரவையின் கீழ் இணைந்துள்ள அமைப்புகள்: Australian Tamil Congress, British Tamils Forum, Canadian Tamil Congress, Danish Federation of Tamil Associations, House of Eelam Tamils, Norwegian Council of Eelam Tamils, New Zealand Tamil Society, Wellington Tamil Society, Swedish Tamil Forum, Malaysia - Tamils Relief Fund, United States Tamil Political Action Council, European Tamil Union, Tamil Cultural Centre.

எஸ் ஜே இம்மானுவேல் 18 மே 2009 ற்க்கு பின்னால் உத்தியோகபுர்வ விடுதலைப் புலிகளின் பிரிவு ஒன்றுக்கு தலைவர் என்பது ஆதாரத்தடன் நிருபிக்கப்பட்டுள்ளது. எஸ் ஜே இம்மானுவேல் தலைமை தாங்கும் GTF, ‘Protest Sri Lankan Goods’, ‘Protest Sri Lankan Airways’ என்ற மண் கவ்விய பிரச்சாரங்கள் நடாத்தியது என்பது முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

அதுமட்டமல்லாமல் புலம்பெயர் சமூகத்தின் பெரிய மோசடிகளில் ஒன்றான வணங்காமண் செயற்குழுவிற்க்கு பின் பலமாக டீசவைளைா வுயஅடை குழசரஅ - டீவுகு இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. BTF, GTF என்பன ஒரே அமைப்புகள். மேலும் GTF இன் தலைவராக நியமிக்கப்பட இருந்த எதிர்வீரசிங்கம் வணங்கா மண் முக்கியஸ்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே வணங்கா மண் கொள்ளைக்கு பின்னணியில் எஸ ஜே இம்மானுவேல் அடிகளார் இருப்பது நிருபணம்.

எஸ் ஜே இம்மானுவேல், அமெரிக்காவில் வசிக்கும் உருத்திரகுமார் கூட்டாகவே Trasnational Government அமைக்க. இதன் முதற் கருவின் கதாநாயகன் கேபி. கே பி கைது செய்யப்பட்டதன் பின்னால் எஸ் ஜே இம்மானுவேல் உருத்திரகுமார் கூட்டே இன்றய விடுதலைப் புலிகளின் சுழியோடிகள். இன்னொரு வகையில் கூறப்போனால் எஸ் ஜே இம்மானுவேல், உருத்திரகுமார், நெடியவன் கைகளிலேயே புலிகளின் பெருவாரியான பணம் தங்கிப்போயுள்ளது.

எனவே இன்றைய யாழ்-மன்னார் கத்தோலிக்க பீடமும் தம்மை எஸ் ஜே இம்மானுவேலுடன் இணைத்துக்கொள்வது ஊகிக்கக் கூடியதே.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகள் செய்த கொடுமைகளை அப்பட்டமாக மறைத்தது மட்டுமல்ல அவற்றை நியாயப்படுத்தி பிரச்சாரம் செய்த முக்கிய நபர்களில் எஸ் ஜே இம்மானுவேல் முக்கியமானவர். உலகில் உள்ள சகல அரசசார்பற்ற பெரும் ஸ்தாபனங்களும், முக்கிய நாடுகளும், விடுதலைப் புலிகளை கண்டித்தபோது “மக்களோடு புலிகள், மக்களே புலிகள்“ என புலம்பெயர்ந்து நாடகளிலிருந்து உசுப்பேத்திய பல ஆயிரம் தமிழ் மக்களை கொல்வதில் எஸ் ஜே இம்மானுவேலுக்கு பாரிய பங்கு இருக்கிறது. ஒரு தமிழன் என்ற முறையில் ராஜபக்ச சகோதரர்கள் கையில் உள்ள இரத்தக்கறையைவிட இவரின் கையில்தான் அதிக இரத்தகறை இருக்கிறது.

போரின் உச்சக் கட்டத்தில் சென்ற வருடம் மார்ச் மாதம் வவனியா கிளிநொச்சி பகுதியில் முள்ளிவாய்க்காலில் இருந்து தப்பி வந்த மக்களை நேரடியாக சந்தித்தவுடன், நான் அவர்கள் தப்பி ஓடும்போது (புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிறிலங்கா இராணுவத்தின் பிரதேசத்திற்குள்) புலிகள் செய்த அட்டூழியங்களை நேரடியாக விபரிக்க கேட்டவன். விடுதலைப் புலிகள் தப்பி ஓடும்போது மக்களை நோக்கி சுட்டதையும் அடித்ததையும் வடுக்களுடன் பார்த்த எனக்கு எஸ ஜே இம்மானுவேல் போன்றோர் புலிகளின் வக்கிரத்தை நியாயப்படுத்துவது புலிகளின் பயங்கரவாதத்தைவிட அகோரமானது.

மனிதப் படுகொலைகள் உக்கிரமாக நடந்து கொண்ட கடைசி நாட்களிலாவது பிரகாரனின் விசுவாசிகளாக இருந்த எஸ் ஜே இம்மானுவேல் போன்றோர் சற்று நேர்மையான முறையில் பிரச்சினைகளை அணுகி இருக்கலாம்.



அண்மையில் லண்டனில் யாழ் புனித பற்றியரசர் கல்லூரி (சென் பற்றிக்ஸ்) அதிபருக்கு அளிக்கப்பட்ட கௌரவ விருந்தோன்பிலும் மற்றும் அண்மையில் காலம் சென்ற மூத்த குருவானவர் வணபிதா மதுரநாயகம் அவர்களின் மறைவை ஒட்டி இடம்பெற்ற இரு வைபவங்களிலும் எஸ் ஜே இம்மானுவேல் முக்கிய பிரதிநிதியாக வந்திருந்தார். இவ்வாறான மதச்சடங்குகளில் நான் எஸ் ஜே இம்மானுவேலை கடந்த 25 வருடங்களாக புலம்பெயர்ந்த மண்ணில் காணவில்லை. நான் இவரை கண்டது எல்லாம் அரசியல் கூட்டங்களில் தான்.

“பாவிகளையும் யேசு மன்னித்து இரட்சிப்பார“ என்ற வேதவாக்கை நம்பித்தான் எஸ் ஜே இம்மானுவேல் அடிகளார் கத்தோலிக் மதத்துடன் இணைந்து கொண்டால் நல்ல விடயம் தான். அதற்கு மாறாக எஞ்சியுள்ள தமிழ் மக்களை இன்னுமொரு முள்ளிவாய்க்காலுக்கு அழைத்து செல்லத்தான் வந்துள்ளாரோ என்பதற்க்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.


**நாளாந்தம் செய்திகளைப் படிக்க:**

**thesamnet.co.uk**

**செய்திகள் கட்டுரைகளை அனுப்பி வைக்க:**

**thesam97@hotmail.com**

**தபால் மூலமான தொடர்புகளுக்கு:**

**ThesamNet**
**P O Box 35806,**
**Leytonstone,**
**E11 3JX, London, UK**


**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# நயவஞ்சக அரசியலின் நாயகர்கள்

– யூட் ரட்ணசிங்கம் –

அறிக்கைப் புரட்சி நடாத்திக் கொண்டிருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் சம்பந்தமான பல செய்திகள் அண்மையில் வெளிவந்த போதும் குறிப்பாக இரு வேறு செய்திகள் விவாதத்தை ஏற்படுத்தி இருந்தன.

1) த. தே கூட்டமைப்பின் வேட்பாளரும் வவுனியா நகரசபைத் தலைவருமான திரு நாதன் வவுனியா நகரை சுத்தம் செய்யும் தொழிலாளரை "வெளியில போங்கடா சக்கிலிய நாயளே" என்று திட்டியதான செய்தி நசம் நெற்றில் வெளியாகி இருந்தது.

த தே கூட்டமைப்பு இது சம்பந்தமான எந்தக் கருத்தையும் கூறாது மௌனம் காத்தது.

2) 18வது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக த தே கூட்டமைப்பின் பா உறுப்பினர் பியசேன வாக்களித்தார் என்ற செய்தி வெளிவந்தவுடனேயே பியசேன மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக பிரேமச் சந்திரன் அறிக்கை விட்டார்.

முதலாவது செய்தி பற்றி அறிவதற்காக வவுனியாவிலுள்ள சில நண்பர்களுடன் தொடர்பு கொண்டேன். யார் இந்த நாதன் என்று அறிய வேண்டும் என்பது எனது ஆவல்.

இவரது சொந்த இடம் யாழ்ப்பாணம். 1975ம் ஆண்டு காலப்பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தராக வவுனியா வந்துள்ளார். பின் பதவி உயர்வு பெற்று பொலிஸ் அதிகாரியாக இருந்துள்ளார். இந்த பொறுப்பான பதவியில் இருந்தபோது சில குடும்பங்களின் அமைதி குலைந்து போனதற்கு காரணமானவராக இருந்துள்ளார்.

போலிஸ் தலைமை இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து தற்காலிகமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

தென் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கு செல்ல மறுத்து தொழிலை இழந்துள்ளார்.

1977ம் ஆண்டு தமிழர்கள் மீது இனப்படுகொலை நடந்தபோது வவுனியா நகரம் அரச படைகளால் எரியூட்டப்பட்டது. அதன்பின் அன்றைய அரசால் உருவாக்கப்பட்ட சன்சோனிக் கமிசனில் ஓர் முக்கியமான சாட்சியாக இருந்துள்ளார்.

இவர் அன்று தொட்டு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர். ரிஎன்ஏ மும்மூர்திகளில் ஒருவரான சேனாதிராஜாவுக்கு மிக நெருங்கிய நண்பர்.

இதுதான் இவரது அரசியல் பின்புலம்.

பின் வவுனியா நகரசபை பற்றி வினவியபோது புளட் வவனியா நகரசபையை கட்டுப்படுத்திய காலப்பகுதியில் அமைப்பின் ஒரு பகுதியினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டபோதும் புளட்டில் சிலர் குறிப்பாக லிங்கநாதன் போன்றோர் வவுனியா நகரின் அபிவிருத்திக்காக அரிய பாடுபட்டார்கள் என்றும் அவர்களால் திருத்தி அமைக்கப்பட்ட பூங்காவும் நூல் நிலையமும் முன் உதாரணங்கள் என்றார்கள்.

நாதன் பதவியேற்ற பின்பு குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு எந்த நகர்புற அபிவிருத்திகளும் நடக்கவில்லை என்றும் சில குளறுபடிகள் நடந்துள்ளதாகவும் தெரிவித்தார்கள்.

அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் வவுனியா எம் பி யாக இருந்த காலத்தைப் போல் இப்போது வவுனியா நகரசபை இருப்பதாக வேறுசிலர் கூறுகிறார்கள்.

வவுனியாவுக்கு இவர்களால் எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை என்றும் தவறுகள் நடக்கின்ற போது வவுனியாவினுடைய பெயர் முன் நிறுத்தப்பட்டு அத்தனை விமர்சனங்களும் பழிகளும் அவதூறுகளும் வவனியா மீது போய்ச் சேருவதாக இன்னுமொரு சாரார் குற்றம் சாட்டுகிறார்கள்.

இவ்வளவு பாரதூரமான குற்றச்சாட்டுகள் இவர்மீது வந்தும் ரிஎன்ஏ இதுவரை மௌனம் காப்பது ஏன்?

மேலும் இரண்டாவது செய்தியின் பிண்ணணியில் பியசேன கூறும் குற்றச்சாட்டுகளில் ஒன்று இந்த ரிஎன்ஏ ஆட்கள் எவராவது இதுவரை அம்பாறை மாவட்டத்திற்கு வந்து மக்களின் குறைகளை கேட்டறியவில்லை என்கிறார்.

கடந்த ஆண்டு மே மாதம் மனிதப் படுகொலை நடந்த பின்பு உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் இருந்து மக்கள் தம்மாலான உதவிகளை அந்த மக்களுக்கு வழங்கி வந்த வேளையிலும் கூப்பிடு தொலைவில் நிற்கதியாக நின்ற வன்னி மக்களை ஏறெடுத்தும் பார்க்காத இந்த ரிஎன்ஏ எவ்வாறு அம்பாறை மக்களின் குறைகளைத் தீர்க்கப் போகிறது?

"அரசு அனுமதி மறுக்கிறது அங்கே செல்வதற்கு" என்று அடிக்கடி அறிக்கை விட்டுக்கொண்டார்கள்

அண்மையில் இவர்கள் வன்னிக்குச் சென்று அந்த மக்களை பார்வையிட்ட புகைப்படங்கள் ஊடகங்களில் வெளிவந்தன. இந்திய அரசியல்வாதிகள் போல் நெற்றியிலே திருநீறும் மடிப்புக் குலையாத வெள்ளை உடையுமாக சென்று வந்துள்ளார்கள்.

எதை அந்த மக்களுக்கு கொடுத்தாலும் உடனே படம் எடுத்து பத்திரிகைகளுக்கு கொடுத்து விடுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களை அம்பாறைக்கு வந்து மக்களின் குறைகளைக் காணுங்கள் என்று கேட்கும் எம் பி பியசேனக்கு தமிழரசுக் கட்சியின் நயவஞ்சக அரசியலைப் புரிந்துகொள்ளும் வல்லமை இல்லை என்றே தெரிகிறது.

"அண்ணன் எப்போ சாவான் திண்ணையைப் பிடிக்கலாம்" என்று காத்துக்கிடக்கும் பிரேமச்சந்திரனுக்கு பியசேனக்கு எதிராக அறிக்கை விட காட்டிய ஆர்வமும் அவசரமும் வவுனியா நகரத் தொழிலாளர்களை "வெளியிலே போங்கடா சக்கிலிய நாய்களே" என்ற நாதனுக்கு எதிராக அறிக்கைவிடவோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவோ முடியவில்லை. இன்றுவரை மௌனம் காக்கும் அந்த நயவஞ்சக தமிழ் அரசியலின் வயது அரை நூற்றாண்டைத் தாண்டிவிட்டது.

அண்மையில் தமிழ்தேசிய ஆவணச் சுவடிகளில் பதிவாகியுள்ள 1984ம் ஆண்டு வெளியான புதியபாதை பத்திரிகையில் ஓர் துணுக்கைப் படித்தேன். லண்டன் குரல் வாசகர்களும் எம் பி பியசேனவும் படிக்க வேண்டும் என்பதற்காக இதைத் தருகிறேன்.


மேலே கொடுக்கப்பட்டுள்ள புதிய பாதையின் செய்தியைப் படித்தீர்களானால் அவர்களின் மக்கள் யார் என்பது புரியும்.

1977 ம் ஆண்டு தேர்தல் முடிந்ததும் திரு தொண்டமான் இப்படிப்பட்ட காரணங்களைக் கூறியே அன்று தவிகூ ல் இருந்து பிரிந்து ஜே ஆர் அரசுடன் சேர்ந்து கொண்டார். அன்றய தொண்டமானிலிருந்து இன்றய பியசேன வரை ஒரே குற்றச்சாட்டு

ஈழத்தமிழரின் அடிப்படைச் சிந்தனையில் மாற்றம் ஏற்படாதவரை அவர்களின் அரசியலில் என்றுமே நேர்மை இருக்கப்போவதில்லை

முப்படைகளையும் கொண்டிருந்த விடுதலைப் புலிகளை முள்ளிவாய்க்காலில் முடித்தது அவர்களின் நயவஞ்சக அரசியலே என்பதை தமிழ்ர்கள் அறியாவிட்டாலும் உலகறியும்.

விதி என்பது பொதுவானது. இதற்கென்றோ இவர்களுக்கென்றோ உருவாவதல்ல. இந்தப் பொது விதிக்குள் சடப்பொருள் மட்டுமல்ல சாதாரண வாழ்வும் அகப்படும் என்பதை இந்த ரிஎன்ஏ இன்னுமா உணரவில்லை?



புதிய பாதை

அன்பளிப்பு
தமிழீழத்தில் 1-50
தமிழகத்தில் 75 காசு

காதம் 2 ஜூன் 1984 சுவடு 18

## உஸ்....ரகசியம்

''தமிழீழ விடுதலை தவிர தரணிதனில் வேறொன்றை நாட மாட்டோம்''

என்று சங்கநாதம் செய்தார்கள் தமிழர் விடுதலை கூட்டணி தலைவர்கள். இன்றோ வட்டமேசை மாநாட்டில் தமது தலைமைக்கு பங்கம் வராமல் இருக்க ஜே. ஆருடன் பேரம் பேசிப்பார்க்க சென்றுள்ளார்கள்.

மிக மிக சோதனை காலம் த. வி. கூ. தலைவர்களுக்கு. பாராளுமன்ற பதவி பறிபோய் பல நாட்களாகிவிட்டது. ஆனாலும் சுகமான வாழ்வு மறுக்கப்படவில்லை. தமிழ் நாட்டில் இலவச வீடுகளில் குடியிருந்து மனைவியோடும், பிள்ளைகளோடும் மகிழ்ந்திருக்கும் இத்தியாக செம்மல்கள் இடையிடையே பொதுப்பணிகளிலும் ஈடுபடுவார்கள். தமிழீழத்தில் இவர்கள் செய்த பணி தமிழகத்திற்கு வந்தால் நின்று போய்விடும். இதோ! தமிழீழத்தில் இருந்து அகதிகளாக வந்த மாணவர்களுக்கு தமிழக கல்லூரிகளில் புலமை பரிசில் கிடைக்க சிபார்சு செய்திருக்கிறார்கள். இவர்கள் சிபார்சின் பேரில் கல்லூரிகளில் அனுமதியும் புலமை பரிசிலும் பெற்ற மாணவர்கள் விபரத்தை கீழே தருகின்றோம்

விடுதலைக்கு இத்தலைவர்கள் தமிழ் நாட்டில் உழைக்கின்றார்களோ என்னவோ, ஆனால் தத்தம் வீட்டிற்கும் குடும்பத்திற்கும் செய்யும் சேவையை தமிழ் மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்

1. மலாவிழி (திருமதி. பகீரதன்)
   திரு. அ. அமிர்தலிங்கத்தின் மருமகள்
2. மைதிலி நவரட்டினம்
   திரு. V. N. நவரட்டினத்தின் (சாவகச்சேரி) மகள்
3. மகேஸ்வரன் (மலேசிய பிரசை)
   திரு. அ. அமிர்தலிங்கத்தின் நெருங்கிய உறவினர்.
4. தர்மாவதி விஸ்வநாதன்
   முன்னாள் யாழ்மேயர் இராஜா விஸ்வநாதனின் மகள்.
5. ரகுராஜ்
   திரு. அ. அமிர்தலிங்கத்தின் நெருங்கிய உறவினர்.
6. சிறிஹறிதாசன்
   திரு. இரா. சம்பந்தனின் நெருங்கிய உறவினர்.
7. வள்ளுவன் — திரு. அ. அமிர்தலிங்கத்தின் மருமகன்

(இவர் சிறிலங்காவில் விஞ்ஞான பட்டப்படிப்பு கற்றவர் தமிழகத்தில் பொறியியல் துறையில் கல்வி பயிலுகிறார்.)

உண்மைகள் உறங்குவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வோல்தம்ஸ்ரோவில் பிறந்தநாள், ஒன்றுகூடல்கள், பொதுக் கூட்டங்களுக்கு

# லோட் புறுக் மண்டபம்







| இருக்கைகள் | | பிரதான பெரிய மண்டபம் 80-100 பேர் | சிறிய அறை - ❶ 50-60 பேர் | சிறிய அறை - ❷ 25 பேர் |
|---|---|---|---|---|
| திங்கள் - வெள்ளி | **8am-5pm** | £25/மணி | £25/மணி | £15/மணி |
| திங்கள் - வியாழன | **5pm- 11pm** | £35/மணி | £35/மணி | £25/மணி |
| சனி - ஞாயிறு | **8am-5pm** | £35/மணி | £30/மணி | £20/மணி |
| வெள்ளி - ஞாயிறு | **5pm- 2am** | £45/மணி | £40/மணி | £25/மணி |

**பிரதான பெரிய மண்டபம்**

- இது தரைமட்டத்தில் உள்ளது. இது நடனப் பகுதியையும் மேடையையும் கொண்டது.
- இது பெரிய கூட்டங்களை, கருத்தரங்குகளை, நடன வகுப்புகளை நடாத்தவும் கல்வி நிலையமாகப் பயன்படுத்தவும் ஏற்றது...

**சிறிய அறை - ❶**

- முதல் மாடியில் உள்ள இம்மண்டபத்தில் உயர்த்தப்பட்ட மேடை உள்ளது.
- நடனத்திற்கான தரை
- மதுப் பாவனைக்கான பகுதி
- அறையின் முழுமையான பார்வையை மறைக்கின்ற தூண்களோ தாங்கிகளோ இங்கில்லை. இது பெரிய கூட்டங்களை, கருத்தரங்குகளை, நடன வகுப்புகளை நடாத்தவும் கல்வி நிலையமாகப் பயன்படுத்தவும் ஏற்றது.

**சிறிய அறை - ❷**

- இது தரைமட்டத்தில் உள்ளது.
- இது சிறிய கூட்டங்கள், கருத்தரங்குகள், யோகா வகுப்புகள், தியான வகுப்புகள், மற்றும் கற்றல் கற்பித்தல்களுக்கு ஏற்றது.

**Special Discount for Clubs & Charities**

**Also available : Kitchen, Outdoor Space/Garden, Private Bar and Toilets, Free Parking**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

*Contact :* **Office Hours : 0207 263 1683**
**Sharmila Fernando : 0799 974 4424**
**Shanthi / Ravi : 0758 319 6835**
**tarrin@desilugroup.com**

Property Owned By :
**Desilu Group of Companies**
**www.desilugroup.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org